புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# துளு பாரம்பாரியத்தில் யக்சகானா நடன வடிவம் மற்றும் வளர்ச்சி

**ஆய்வாளர்**
**மா.கணேசன்**
*முனைவர்பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை*
*பெரியார் பல்கலைக்கழகம்*
*சேலம்-636 011.*

**ஆய்வுச் சுருக்கம்**

*கலை மனித வாழ்வில் முக்கிய அங்கமாகும். கலை இரசனை இல்லாத மனிதன் களர்நிலத்திற்கு ஒப்பாவான்.மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து விதங்களிலும் கலையாற்றல் நீக்கமற நிறைந்திருக்கிறது எனலாம்.இத்தகைய கலையாற்றல் தமிழ்ச் சமூகத்தில் மட்டுமின்றி, தமிழிலிலிருந்து பிரிந்து சென்ற திராவிட மொழியான துளு மொழியிலும் காணப்படுகிறது.இம்மொழியைச் சார்ந்த கலை வடிவத்தில் தமிழ் – தமிழ்ச்சார்ந்த கூறுகளும் பிரதிபலிப்பதை ஆய்வின் வழியாக உணரமுடிகிறது.அதோடு இந்தியளவில் வழங்கப்பட்டு வரும் பல்வேறான பிராந்திய கலைவடிவங்களோடு ஒத்து நிற்பதையும் அறிவதற்கு ஏதுவாக அமைகிறது.துளு நாட்டில் பல்வேறு விதமான நாட்டுப்புறக் கலைகள் வழங்கப்பட்டு வந்தாலும் 'யக்சகானா' எனும் நாட்டுப்புறக் கலை தனித்துவமிக்கவையாகத் திகழ்கிறது. இக்கலையைப் பற்றி ஆராயுமிடத்து பல்வேறு மாநிலக் கலைகளோடு பொருந்துவதையும் தமிழர் பாரம்பரியத்தோடு ஒத்திசைவதையும் தெள்ளத்தெளிவாக அறிந்து கொள்ளமுடிகிறது. இக்கலையினைப் பற்றி ஆய்வுலகிற்கு எடுத்துரைப்பதே இக்கட்டுரையாகும்.*

**கலைச்சொற்கள் :** *துளு பாரம்பரியம், யக்க்ஷகானா, வடிவம், ஒப்பனை*

**முன்னுரை**

*பண்டைய காலத்தில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மனிதன், உணவுக்காக ஆற்றங்கரைகளைச் சார்ந்துத் தங்கி வாழத் தொடங்கி நிலையில் சமுதாயம் என்னும் அமைப்பு உருவானது.சமுதாய அமைப்பில் நிகழ்ந்த இன்ப துன்ப நிகழ்ச்சிகள் கலைகள் தோற்றம் பெறுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தன.மனிதன் படைக்கும் கலைகள் காலந்தோறும் பெருகிவருகின்றன.மேலும் மனிதனின் உள்ளத்தில் தோன்றும் அழகியல் உணர்வுகள் புதிய சிந்தனைகளால் கலைகளின் தோற்றத்திற்குக் காரணமாகின்றன. தான் மகிழ்ச்சியாக இருந்த காலத்தில் மனிதன் தன் சிந்தனையின் மூலமாக படைத்த ஆடல், பாடல், ஓவியம் முதலான நிகழ்வுகள் காலப்போக்கில் கலை வடிவங்களாக நிலை பெற்றிருக்கின்றன. அதாவது கலைஞர்கள் தம் நுட்பமான அறிவால் சிந்தித்து உள்ளம் களிக்கத்தக்க படைப்புகளை உருவாக்கி உலகிற்கு அளிக்கின்றனர். அந்த வகையில் துளு, நாட்டின் பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றான யக்சகானாவின் வடிவம் மற்றும் **வளர்ச்சி** போன்றவை குறித்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***யக்சகானா அறிமுகம்***

*கர்நாடக மாநிலத்தின் கடலோர மாவட்டங்களான தட்சிண கன்னடா, உடுப்பி மற்றும் உத்தர கன்னடப்பகுதியில் நாட்டுப்புற நடன வடிவங்களில் ஒன்று யக்சகானாவாகும்.இவை இசை வடிவங்கள் மற்றும் நாடகக் கலைகளிலிருந்து உருவானது என்பதை அறியமுடிகிறது.*

***யக்சகானா – பெயர்க் காரணம்***

*ஒரு நடன வடிவத்தை விட ஒரு நாடக வடிவத்தில் 'யசவு' – கண என்றால் ஒரு யகூவத்தின் பாடல் (கண) என்று பொருள்.பண்டைய இந்தியாவில் சமஸ்கிருத இலக்கியங்களில் குறிப்பிட்ட ஒரு பழங்குடியினர் 'யக்ஷர்கள்' ஆவர். அதாவது, யக்ஷ-கானா என்பது யக்ஷனின் பாடல் கானா என்ற பொருள்படும்.*

***யக்சகானா – வடிவம்***

*யக்சகானா என்ற பெயர் முதன்மையாக கர்நாடகாவின் கடலோர மற்றும் மலைநாடு பகுதிகளில் நிலவும் பாரம்பரிய நாடக வடிவத்தைக் குறிப்பதாகும். ஆனால் இவை கர்நாடகாவின் பிற பகுதியிலும் அதன் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா போன்ற பல பகுதிகளில் நிலவும் பிற வடிவங்களுடன் தொடர்புடையது.*

*அதுமட்டுமின்றி, இந்தியாவில் பல மாநிலங்களின் பல வடிவங்களான,*

1. *பரத நாட்டியம் (தமிழ்நாடு)*
2. *சத்ரியா (அஸ்ஸாம்)*
3. *படேனி (மத்திய கேரளா)*
4. *துள்ளல் (கேரளம்)*
5. *பாவாய் (குஜராத்)*
6. *குச்சிப்புடி (ஆந்திரா)*
7. *கதகளி (கேரளா)*

8. மோகினியாட்டம் (கேரளா)
9. ஒடிசி (ஒரிசா)
10. சௌ (ஒரிசா)
11. களரிபயட்டு (கேரளா)
12. குமரா (ஒரிசா)
13. தெருக்கூத்து (தமிழ்நாடு)
14. கூடியாட்டம் (கேரளா)
15. பயலாடா (கர்நாடகா)
16. கிருஷ்ணாட்டம் (கேரளா)
17. நிருத்யா
18. ஹரிசுதா (ஆந்திரா)
19. லாவணி (மகாராஷ்டிரா)
20. சாக்கியர் கூத்து (கேரளா)
21. டோலு குனிதா (கர்நாடகா)
22. தெய்யம் (கேரளா)
23. கியால் (இராஜஸ்தான்)
24. பஞ்சவாத்யம் (கேரளா)

போன்ற நடன வடிவங்களுடன் யக்சகானா தொடர்புடையவை என அறியலாம்.

பாரம்பரிய யக்சகானா நாடகத்தின் பல வடிவங்களான, முடல்பயா (Mudal Paya (தெற்கு கர்நாடகா)) டொட்டாடா (Doddata (வடக்கு கர்நாடகா), கெலிகே (Kelika (ஆந்திரா எல்லைப் பகுதி)), கட்ட்டகோர் (சிரமராஜ் நகரிலுள்ள கொள்ளேகால்) போன்றவை. கட்டடகோர் என்பது கரையோரா யக்சகானாவின் நேரடி பிரிவாகும்.(வடிவம்).அதே 'முடல்பயா' மிகவும் நெருக்கமான தொடர்புடைய வடிவமாகும்.

யக்சகானா

- முடல்பயா (தெற்கு கர்நாடகா)
  - தொட்டா
  - சன்னதா
- படுவல்பயா (வடக்கு கர்நாடகா)
  - தென்குத்திட்டு (பழைய தென்கனரா)
  - படகுத்திட்டு (வடகனரா)

இவற்றின் மூலம் யக்சகானாவின் வடிவத்தை அறியமுடியும்.இதனை கலைஞர்களின் பாடல் வரிகட்டு மட்டுமின்றி அவ்வரிகளை பின்பாட்டுக்காரர்கள் பாடும் பொழுதும் இசைக்கருவிகள் இசைக்கப்படும். இவ்வாறு கூத்தெங்கிலும் இசையின் கூறுகள் பரந்து பட்டமையும், நிலையால் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படும் என்று (அறிவு நம்பி, தமிழரின் கூத்தியல்

*ப.167) குறிப்பிடுகிறார். அதாவது இராகத் தாளத்தில் கருவியிசையும் பின்பாட்டிசையும் அமையும் என்கிறார்.*

*யக்சகானா, பொதுவாக இரண்டு நிலையில் அமர்ந்து பாடக்கூடிய வடிவமாகும். 1. மேடையில் அமர்ந்து அல்லது கலைஞர்களுக்கு பின்னால் நின்றுபாடுவது. 2. பாகவதர் மத்தளக்காரருடன் சேர்ந்தும் பின் திரைக்கு எதிரே உள்ள உயர்த்தப்பட்ட மேடையில் அமர்ந்து பாடுவது போன்றவையாகும்.*

*யக்சகானா நிகழ்ச்சியில், இசையும் நடனமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது.சைகைகள் மூலம் வார்த்தைகளுக்கு உயிர் கொடுக்கப்பட்டு, பாடலால் நடனம் விவரிக்கப்படுகிறது.இதில் பாடலின் முதல் பாதி உள்ளத்தின் உணர்ச்சியை வெளிப்படுத்தப்பாடப்படுகிறது.பாடகர் சில பாடல்களில் திரும்பத் திரும்ப பாடிய வரிகளை பாடுவர்.இதற்கென நிலையான விதிகள் எதுவும் இல்லை. இதில் பாடகர் (பாகவதர்) நடிகர். இவர்களுக்கிடையே ஒருங்கிணைப்பைப் பொறுத்தே அமையும்.*

*"செய்யுள்களாகவோ உரைநடையாகவோ நாடகம் அமையலாம்.செய்யுள் வடிவில் நாடகம் அமைதல் போற்றத்தக்கது என்றும், பாட்டு நன்கு விளங்கும் இடமாக உள்ளது நாடகம் என்றும் அறிஞர் இலியட் கூறுவார்" என்பர். (ஸ்ரீகுமார் நாடகம், பொதுப் பண்புகள் இலக்கியப் பூங்கா, ப.100). அத்தகைய செய்யுள் வடிவ நாடகமாகத் தமிழரின் தெருக்கூத்து அமைகிறது."பல வகையான இசைப்பாடல்கள் நாட்டார் நாடகங்களில் உள்ளன.அவற்றைத் தரு, திபதை என்று இருவகையாக்க் குறிப்பிடுவர்.அவை தவிரச் சிந்து தாழிசை முதலிய இசைப்பாடல்களும் உள்ளன" என நாடகப் பாடல் வகைகளைச் சுட்டுவர். இவ்வாறாகப் பல்வகைப் பாட்டாலும், நாட்டுப்புறச் சிந்துக்களாலும் கதை நிகழ்ச்சிகள் கூத்தாக அமையும் (ஏ.என்.பெருமாள், தமிழ் நாடகம் – ஓர் ஆய்வு, ப.329) என்று குறிப்பிடுகிறார்.*

**ஒப்பனை மற்றும் உடைகள்**

- *ராஜபன்னா – வீரநிறம் (சிவப்பு பச்சை)*
- *காட்டு பன்னா – அரக்கன் நிறம் கருப்பு*
- *ஸ்திரீ பன்னா – பெண் வேடம் (பச்சை, சிவப்பு)*

*பெரும்பாலும் அவர்கள் கண்களைச் சுற்றி இந்த வண்ணங்களை வரைக்கின்றனர்.*

*எந்த ஒரு யக்சகானா நிகழ்ச்சியாக இருந்தாலும் மேடையில் கதாபாத்திரத்தை அடையாளம் காண்பதில் வண்ணம் முக்கிய பங்கு வகிக்கிறது.*

- ❖ *சிவப்பு – வீரம், போர், ஆணவம், கோபம்*
- ❖ *பச்சை – அமைதி மற்றும் சிற்றின்பம்*
- ❖ *கருப்பு – மரணம், கொடுமை மற்றும் சோகம்.*

*உடையில் யதார்த்தமான அணுகுமுறை எதிர் பார்க்கப்படுவதோ அல்லது பொருத்தமானதோ அல்ல, ஒப்பனை மற்றும் உடைகள் மிகவும் கம்பீரமான தோற்றத்தை அளிக்கின்றன.*

**நடனம் வடிவம் - செயல்பாடு**

*யக்சகானாவின் நடனமானது பாடல், வசனம், இசை அமைப்பு போன்றவை தாளத்திற்கு ஏற்ப அமைக்கப்படுகிறது. இதில் கால்கள், கைகள், கழுத்து, உள்ளங்கைகளின் தாள அசைவுகள், முகபாவனைகள், தோரணைகள், உடல் வளைவு மற்றும் குதித்தல், அமர்தல், சுற்றுதல், நிருத்த அசைவுகள் போன்ற அம்சங்களையும் கொண்டுள்ளது. அதாவது “பாத்திரங்கள் ஒவ்வொன்றும் அவையில் நுழையும் போது குறிப்பிட்ட அசைவுகளுடனும் ஜதிகளுடனும் நடன முறைகளுடனும் தோன்றும்.இவ்வாறு அவையில் தோன்றும் போது பிறகும் தனித்தனி ஆடல் முறைகளை அங்க அசைவுகளில் காட்டுவர்.குறைவான வெளிச்சத்தில் நாடகங்கள் நடைபெற்ற அந்த நாளில் அங்க அசைவுகளை அதிகமாக்க் காட்டி நடிக்க வேண்டிய அவசியம் இருந்தது. நடிகன் கண்களிலோ, முகத்திலோ, காட்டும் உணர்ச்சிகளைக் காட்ட வேண்டிய நிர்பந்தம் நடிகர்களுக்கு இருந்தது” (அவ்வை தி.க.சண்முகம், நாடகச் சிந்தனைகள், ப.15) என்று சுட்டிக்காட்டுகிறார். இதன் மூலம் யக்சகானா நடிகர்களின் கதாபாத்திரச் செயல்பாடு குறிப்பதை அறியலாம்.*

*நடனக்கலை இசைக்கலையோடு தொடர்பு உடையது.யாப்பு என்னும் இந்த ஒலியமைப்பு முறையை நடனக்கலையோடு தொடர்புபடுத்தி முன்னோர் உணர்ந்திருந்தனர்.அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் யாப்பின் உறுப்புகளின் பெயர்கள் பாட்டுக்கும் ஆடற்கலைக்கும் இருந்த பழைய உறவைத் தெரிவிக்கும் சொற்கள்”. (வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ்மொழியின் வரலாறு, பக்.198-199) என்று குறிப்பிடுகிறார்.*

*யக்சகானா நடனத்தின் செயல்பாடு, நாடகத்தின் உணர்ச்சிப்பூர்வமான உள்ளடக்கத்தை செழுமைப்படுத்துவதும், வேகப்படுத்துவதும், அழகை மேம்படுத்தும் “நிருத்யா” ஆகும். இதனை,*

1. *சங்கீதம்*

2. குரல் இசை பாடல்

3. கருவி இசை

அதாவது,

யக்சகானா நாட்டியத்தின் முதன்மையாக 'ஸ்தாமி பாவம்' (அடிப்படை உணர்ச்சி நிலை) மற்றும் 'சஞ்சாரி பாவம்' (நிலையான உணர்ச்சி நிலை) போன்றவையை வெளிப்படுத்துவதாகும்.இதனால் தன் எந்த ஒரு பாடலுக்கும் நிலையான அசைவுகள் இல்லை என்பதை அறியலாம்.

கலை வடிவத்தின் அளவுருக்களுக்குள் அர்த்தத்தை திறம்பட வெளிப்படுத்த கலைகஞர்களுக்கு தனது உடல் மொழியைப் பயன்படுத்துவதற்கான அனைத்து சுதந்திரமும் உள்ளது.தகவல் பரிமாற்றத்தின் உதவியுடன் செய்யப்படுகிறது.இவ்வாறு யக்சகானா நடனத்தின் செயல்பாடு பகுதியளவு மட்டுமே உள்ளது.

யக்சகானாவின் நடனம் கடலோரப் பகுதிகளில் உள்ள நாட்டுப்புற பூதாராதனே உள்ளூர் தெய்வங்களை வழிபடுதல் மற்றும் நாகராதனே (பாம்புகளை வணங்குதல்) போன்றவற்றால் பெருமளவில் ஈர்க்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. இதனால் யக்சகானா ஒரு நாட்டுப்புறக் கலை வடிவமாக வளர்ந்து செழித்து வளர்ந்ததால், பரதநாட்டியம் மற்றும் கதகளி போன்ற நடனம் அடையாளப்படுத்தப்படவில்லை.

**வளர்ச்சி மற்றும் மாற்றங்கள்**

19-ம் நூற்றாண்டில் இந்தியாவில் சமூக பொருளாதார மாற்றங்களால் யக்சகானா போன்ற கலை நிகழ்ச்சிகளில் மாற்றம் கொண்டு வந்தனர்.ஏராளமான புதிய வகைப் பாடல்கள் உருவாக்கப்பட்டு, கலை வடிவத்தின் பூர்விக எல்லைக்கு வெளியே நிகழ்த்தத் தொடங்கினர்.

1800-ம் ஆண்டில் தர்மஸ்தாலாவைச் சேர்ந்த ஒரு குழு மைசூர் மன்னர் அரசவைக்குச் சென்று நிறுவினர்.மேலும் 1840-ம் அண்டு உத்தர கன்னடத்திலிருந்து (வடக்கு கனரா) ஒரு குழு மகாராஷ்டிராவுக்கு வருகை செய்து விஷ்ணுதாஸ் பாவே எழுதிய முதல் நவீன யுகநாடகத்தை ஊக்கப்படுத்தியது.

கடலோர கர்நாடக மற்றும் பிற பகுதிகளிலும் பல குழுக்கள் உருவாயின. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் யக்சகானா அமைப்பு ஒரு வடிவத்தையும் அடைந்தது.1930-ல் பாடல்கள் அமைப்பு மற்றும் விளக்கக்காட்சியில் சில மாற்றங்கள் நிகழ்ந்தன.நடனம் மற்றும் பேசும் சொல்

வளமை செய்யப்பட்டு சீராக்கப்பட்டது.ஆனால் நவீன ஆடை கற்களால் பதிக்கப்பட்ட நகைகள், கையால் நெய்யப்பட்ட துணிகள் மற்றும் மர ஆபரணங்களை மாற்றியதால் ஆடைகள் சிதைவடையத் தொடங்கின.

1950-ஆம் ஆண்டில் யக்சகானா நடன நாடகக் குழுக்களால் வணிகமயமாக்கப்பட்டது.இதில் பார்வையாளர்களுக்கென்று இருக்கைகளுடன் நிகழ்ச்சி காண அனுமதி சீட்டும் விற்கப்பட்டது.இதில் நாட்டுப்புற காவியங்கள், சமஸ்கிருத நாடகங்கள் மற்றும் கற்பனையால் உருவாக்கப்பட்டுள்ளன.இதை தக்சினா கன்னட மாவட்டத்திலுள்ள தெற்க பகுதியான துளு நாட்டில் மேடையில் அறியமுகப்படுத்தப்பட்டது.யக்சகானா நடன நாடகத்தின் மாற்றங்கள் அனைத்தும் 1970 களுக்குப் பிறகு கூடுதல் வளர்ச்சி பெற்றன.

அதாவது நடை மற்றும் வடிவத்தில் பல நுட்பமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.ஆனால் யக்சகானாவின் தனித்தன்மை மாறாமல் உள்ளது. கலை, வடிவம், ஆய்வு மற்றும் படைப்பாற்றலுக்கான மிகப்பெரிய வாய்ப்பை வழங்குவதால் புதிய வடிவம் ஊடுருவுவது தவிர்க்க முடியாத்து யக்சகானாவில் விரிவான ஆய்வுகள் இருந்தாலும் தொடர்ந்து செழித்து வளர்ச்சி பெறும் என்று அறியமுடிகிறது.

**முடிவுரை**

இன்றைய காலகட்டமானது தொழில்நுட்ப வளர்ச்சி மேலோங்கிய காலகட்டமாகையால் யக்சகாளை வளர்ச்சி நிலைகளை ஊடகங்களில் பதிவு செய்ய வேண்டிய தேவை உள்ளது. கலைஞன் என்பவனுக்கு புதிய புதிய எண்ணங்கள், சிந்தனைகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். அதனை வீண்போகச் செய்யாமல் தான் பெற்றுக் கொண்ட அனுபவத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் அதனை பதிவு செய்வதன் மூலம் கலையை வளர்க்க முடியும்.மேலும், யக்சகானா தன் சுயத்தை இழக்காமல் தன் அடையாளங்களுடன் புதிய விடயங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும்.நல்லதொரு ஊடகமாகவும், மக்கள் கலையாகவும் இருக்கிறது. ஊடகங்கள் கலை மற்றும் பண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையாகவும், அவற்றை வளர்ப்பனவாகவும் இருப்பதை இவற்றின் மூலம் நன்கு அறியப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. அறிவுநம்பி, 2008, தமிழரின் கூத்தியல், சித்திரம் பதிப்பகம், புதுச்சேரி.
2. ஸ்ரீமோர், நாடகம் பொதுப்பண்புகள், இலக்கிய பூங்கா.

3. பெருமாள் ஏ.என், 1979, தமிழ் நாடகம் – ஒர் ஆய்வு தமிழ்ப் பதிப்பகம், சென்னை.
4. அவ்வை தி.க.சண்முகம், 1978, நாடகச் சிந்தனைகள், வானதி பதிப்பகம், சென்னை.
5. வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார், 2003 தமிழ் மொழியின் வரலாறு, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.